## தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர்/ கட்டண அறவீட்டு உதவியாளர்/ மின் செயற்பாட்டாளர்கள்/ விலங்குப் பொறுப்பாளர்கள்/ யானைகள் பொறுப்பாளர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரல் - 2026

01. தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தில் கீழேயுள்ள பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *தொடர் இல.* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *இணைத்துக் கொள்ளப்படும் தகைமைகள்* | *சம்பள அளவுத்திட்டம்* |
|---|---|---|---|---|
| 01 | உதவிக் கட்டுப்பாட்டாளர் (விலங்கு/ மீன்/ ஈரூடக/ பூங்கா) (MN - 01) | 02 | ✓ **கல்வித் தகைமைகள் -**<br>சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி/ கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைதல்.<br><br>(ஆ) I. கல்விப் பொது தராதரப் பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் பாடங்கள் இரண்டு (02) (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைதல்.<br><br>II. பழைய பரிந்துரையின் பிரகாரம் கலவிப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் பாடங்கள் மூன்றில் (03) சித்தியடைந்திருத்தல்.<br><br>➢ **தொழில்சார் தகைமைகள்-**<br>பதவிக்கு உரியதாகப் பெற்றுக் கொண்டுள்ள தொழில்சார் தகைமைகள் விசேட தொகுதியொன்றாகக் கருதப் படுகின்றது. | ரூபா 45,230.00 -10 x 540 - 11 x 630 - 10 x 890 - 10 x1,190 - ரூபா 78,360.00 |
| 02 | கட்டண அறவீட்டு உதவியாளர் (MN - 01) | 02 | ✓ **கல்வித் தகைமைகள் -**<br>சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி/ கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைதல்.<br><br>கல்விப் பொது தராதரப் பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திலாவது (1) (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.<br><br>➢ **தொழில்சார் தகைமைகள்- ஏற்புடையதன்று,** | ரூபா 45,230.00 -10 x 540 - 11 x 630 - 10 x 890 - 10 x1,190 - ரூபா 78,360.00 |

| *தொடர் இல.* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *இணைத்துக் கொள்ளப்படும் தகைமைகள்* | *சம்பள அளவுத்திட்டம்* |
|---|---|---|---|---|
| 03 | மின் செயற்பாட்டாளர் (PL - 03) | 04 | ✓ **கல்வித் தகைமைகள் -**<br>கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாத தவணைகளில் குறைந்த அளவில் திறமைச் சித்தி இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**தொழில்சார் தகைமைகள்-**<br>➢ மின் செயற்பாட்டாளர் பதவி - மின் செயற்பாடு பற்றிய தேசிய தொழில் தகைமையில் (NVQ) 4 மட்டத்தின் பிரகாரம் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல். | ரூபா 42,780.00 -10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூபா 66,540.00 |
| 04 | விலங்குப் பொறுப்பாளர்கள் (PL - 02) | 10 | ✓ **கல்வித் தகைமைகள் -**<br>கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாத தவணைகளில் குறைந்த அளவில் திறமைச் சித்தி இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**தொழில்சார் தகைமைகள்-**<br>➢ உரிய பதவிக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தீர்மானித்துள்ளவாறு தேசிய தொழில் தகைமைகளில் (NVQ) குறைந்த அளவு இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவத்தைப் பெற்றிருத்தல். | ரூபா 41,800.00 -10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூபா 65,560.00 |
| 05 | (PL - 02) | 02 | ✓ **கல்வித் தகைமைகள் -**<br>8 தரம் சித்தியடைதல்<br><br>➢ **தொழில்சார் தகைமைகள்-**<br>யானைகளைப் பராமரித்தல் பற்றிய அறிவு மற்றும் யானைகளுக்கு உள்நாட்டு மருத்துவம் செய்யும் திறன் | ரூபா 41,800.00 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூபா 65,560.00 |

02. **ஆட்சேர்ப்பு செயன்முறை :**

➢ **அனுபவம் :**

i. உதவிக் கட்டுப்பாட்டாளர்/கட்டண அறவிட்டு உதவியாளர்/ மின் செயற்பாட்டாளர்/ விலங்குப் பொறுப்பாளர்/ யானைகள் பொறுப்பாளர் - விண்ணப்பிக்கின்ற பதவிக்குரிய துறையில் மூன்று வருட (03) அனுபவம்.

03. **உடல் தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும், போதுமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகுதியடையவராக இருத்தல் வேண்டும்.

04. **ஏனைய தகைமைகள்** :

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரி சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

05. **வயதெல்லை** :

உதவிக் கட்டுப்பாட்டாளர்/ கட்டண அறவீட்டு உதவியாளர் :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு அதாவது 27.02.2026 ஆந் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

மின் செயற்பாட்டாளர் / விலங்குப் பொறுப்பாளர்கள்/ யானைகள் பொறுப்பாளர் :

- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு அதாவது 27.02.2026 ஆந் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை :**

உதவிக் கட்டுப்பாட்டாளர் / கட்டண அறவிட்டு உதவியாளர்/
- எழுத்துப் பரீட்சையொன்று மற்றும் பொது நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

மின் செயற்பாட்டாளர்/

- தொழில்சார் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

விலங்குப் பொறுப்பாளர்கள்/ யானைகள் பொறுப்பாளர்

- செயன்முறை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

07. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி :** பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் எனும் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும்.

**குறிப்பு** - விண்ணப்பதாரியொருவர் பரீட்சையில் தோன்றுகின்ற அனைத்து வினாத்தாள்களிலும் ஒரே மொழியில் பதில்களை அளிக்க வேண்டும்.

தமது வினாத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கான மொழியை மாற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

08. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

➢ விண்ணப்பதாரிகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கீழேயுள்ள ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் தினத்தில் நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

i. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

➢ மேலும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையில் வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கீழுள்ள ஆவணங்களை தேவைக்கேற்றவாறு சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டிருக்க வேண்டும்.

i. பிறப்புச் சான்றிதழ்;
ii. தேசிய ஆளடையாள அட்டை;
iii. கல்விச் சான்றிதழ்கள் மற்றும் செயற்பாட்டுப் பட்டியல்கள்;
iv. அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்;
v. நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் பொலிஸ் அறிக்கை).

**கவனிக்க வேண்டியவை :**

(அ) விண்ணப்பப்படிவத்துக்கு எந்தவொரு ஆவணத்தையும் அல்லது அதன் பிரதியொன்றையும் இணைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

(ஆ) கல்வி மற்றும் தொழித் தகைமைகளின் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அவ்வாவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களைப் பற்றி கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

09. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை** :

i. விண்ணப்பங்கள் 2026.02.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் “பணிப்பாளர் நாயகம், தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம், தெஹிவளை” எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தினத்தின் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது.
iii. விண்ணப்பப்படிவங்கள் இடப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “உரிய பதவி” குறிப்பிடப்பட வேண்டும்.
iv. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர்/ சத்தியப்பிரமாண ஆணையாளரொருவர்/ பிரபல நொத்தாரிசு/ வழக்கறிஞரொருவர்/முப்படையின்உயர்அதிகாரியொருவர் அல்லது ரூ. 71,240.00 ஆன அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் உள்ள பதவிநிலை அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
v. இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் வடிவமைப்புக்கு பொருந்தாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் என்பதனைப் பற்றி எந்தவிதமான முறைப்பாடொன்றும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதென அழைப்பு அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு அத்தகைமைகள் எல்லா வகையிலும் பூரத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பதாரியொருவருக்கு மேலேயுள்ள தகைமைகள் இல்லாதென கண்டறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படுகின்ற காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு விடயமும் தவறானது என்பதனை அறிந்தறிந்தே சமர்ப்பித்துள்ளதென வெளிப்படுத்தப்பட்டால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

12. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதாவதொரு முரண்பாடு ஏற்பட்டால், அதன் போது சிங்கள மொழி அமுல்படுத்தப்படும்.

க.வே- பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் பிரகாரம் உரிய நேர்முகப் பரீட்சை மற்றும் பரீட்சை கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்ளும் செயன்முறையை மிளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழுவின் உத்தரவின் பிரகாரம்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்,
தெஹிவளை.

2026, சனவரி 08.